# மோதுகையின் நாகரீகம், மோதுகை மாற்று நிலையாக்கத்திற்கு வேண்டிய வழிகாட்டும் எண்ணமாக ஆக்கநிலைப்பட்ட போர் தவிர்ப்பு நிலை

தியெத்தர் செங்காஸ்




1. அறிமுகம் 30

2. ஒரு புதியஉலகஒழுங்கமைப்பு 31

3. 20 ஆம் நூற்றாண்டில் சமூக, அரசியல் மாற்றுநிலையாக்கம் 32

4. மோதுகையை சமாதான வழிமுறையில் ஒழுங்கு நெறிப்படுத்திக் கொள்வதற்கான நிபந்தனைகள் 33

5. ஆக்கபூர்வமான மோதுகை முகாமைத்துவ பண்பாட்டின் தயங்குநிலை வளர்ச்சி 35

6. சமூக மற்றும் அரசியல் மாற்றுநிலையாக்கங்களுக்கான நிலை மாற்றுப் பதிற்செயற்பாடுகள் 37

7. ஆக்கபூர்வமான மோதுகை முகாமைக்கான சர்வதேச பண்பாட்டு நடைமுறையொன்றினை கட்டியெழுப்புதல் 41

8. சமாதான கொள்நெறி 42

9. சமாதானத்திற்கான பூகோளநிலைப்பட்ட ஒரு முறைமை 43

10. பூகோளநிலைப்பட்ட சமாதான முறைமை ஒன்றினை ஊக்கிவளர்ப்பதற்கான செயற்பாடுகள் 44

11. உசாத்துணை நூல்களும், மேலதிக வாசிப்பும் 45

# மோதுகையின் நாகரீகம், மோதுகை மாற்று நிலையாக்கத்திற்கு வேண்டிய வழிகாட்டும் எண்ணமாக ஆக்கநிலைப்பட்ட போர் தவிர்ப்பு நிலை

தியெத்தர் செங்காஸ்

## 1. அறிமுகம்

சமாதானம் என்பது எவ்வாறு எதைக்கொண்டு உண்டாக்கப்பெறுகிறது? இருபதாம் நூற்றாண்டின் முதலிரண்டு தசாப்தகாலத்தில், போரொழிப்பு நிகழ்ச்சிகளில் முன்னின்றவர்களில் ஒருவரான அல்பிரட் எச். பிரைட் என்பவர், போரொழிப்புவாத நிகழ்ச்சித்திட்டத்தின் நடுநாயகமாக இவ்வடிப்படைக் வினாவை எழுப்பினார். <u>காரண நிலைப்படு போரொழிப்புவாதமே</u> பிரதான சொற்றொடராக இருந்தது. “தாக்க விளைவு ஒன்றினை நாம் அகற்றவிரும்பினால், முதலில் நாம் அதற்கான காரணத்தை அகற்ற வேண்டும். அதற்குப் பதிலாக புதியதும், நாம் விரும்பக்கூடியதுமான ஒரு தாக்க விளைவினை ஏற்படுத்தக்கூடிய ஒரு காரண சக்தியை அதறகுள் கொண்டுவர வேண்டும். அப்போது அது நாம் விரும்பும் பலன்விளைவனை ஏற்படுத்தும். (பிரைட் 1918,10). முறையியலைப் பொறுத்தவரையில் அது மறைபொருளாயிருந்தாலும், திட்டவட்டமானமுறையில் அது அமைந்துள்ளது. அரசுகளுக்கிடையேயான தொடர்புகளில் இன்னமும் நிலவிவருகின்றதான சர்வதேச ஒழுங்கின்மையின் விளைவுதான் போர் என்றால், போர் எதன் விளைவாக இருக்கின்றதோ அதனை அகற்றும் பொருட்டு ஒழுங்கின்மை என்பது இல்லாதொழிக்கப்பட வேண்டும். மேலும் அந்த ஒழுங்கின்மையின் இடத்தில், பொதுவாக அஹிம்சைவழியான, நம்பத்தகுந்த முறையிலே முகாமைப்படுத்தத்தக்க ஒரு மோதுகைக்கு இடம்கொடுப்பின் அதன் விளைவாக வரும் தாக்கம் ஒரு “சமூக ஒழுங்கின்மைக்கு” இட்டுச்செல்லாது. இன்னொருவகையில் கூறுவதானால்-அதாவது சொற்றொடரின் அரசியல் அர்த்தத்தில் கூறுவதானால்- சமாதானம் உருவாக்கப்பட்டாகவேண்டும்.



எனவே காரணநிலைப்பட்ட அல்லது காரண/தாவிளைவுப் போரொழிப்புவாதத்தின் சித்தாந்தமானது சமாதானத்திற்கான முன்தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளைப்பற்றி முறைமையாகச் சிந்திப்பதற்கான ஒரு முயற்சினுள்ளே தளம் கொண்டுள்ளது. ஆயினனும், ஒரு பகுப்பாய்வு முறையில், கோட்பாட்டுடன் ஒத்தியல்புடைய ஆக்கபூர்வமான மோதுகை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் உள்ளிட்ட நவீன காலத்திற்குப் பொருத்தமான ஒரு சமாதானக் கோட்பாட்டை உருவாக்குகின்ற தற்போதைய முயற்சிகளுடன் அது ஒப்பிடத்தக்கது. (செங்காஸ் 1995, செம்பியெஸ் 1998).

தனிக்குறிப்பாகவுள்ள இந்தப் பதம் வெவ்வேறு எழுத்தாளர்களால தனித்தனியே பயன்படுத்தப்பட்டதோ இல்லையோ, செம்மையான போரொழிப்புவாத விவாதத்தில் கற்றறிபுலமைநிலை மற்றும் நடைமுறைசார்ந்த முக்கியத்துவமளிக்கப்பட்ட ஒருவிடயமாக காரணநிலைப்பட்ட போரொழிப்புவாதம் அமைந்திருந்தது. போரொழிப்புவாத இயக்கங்களிடையே இது பற்றிய எண்ணக்கருவானது வலுவிழந்து, இறுதியில் இல்லாத ஒரு பிரச்சினையாக மாறியமை இருபதாம் நூற்றாண்டின் பெருந் துன்பியல் நிகழ்வுகளுள் ஒன்றாகும். வன்முறை, போர், இனக்கொலை மற்றும் இராணுவ எதிர்ப்பு ஆகியவற்றின் கட்டமைப்புக்குள்ளே காணப்படும் பரஸ்பர அவநம்பிக்கைகள் நிறைந்த இருபதாம் நூற்றாண்டில், இராணுவ எதிர்ப்பு வாதமானது “நன்கு புரிந்து கொள்ளத்தக்க காரணங்களுக்காக” போரொழிப்புவாத

நிகழ்ச்சிநிரலில் மேலாண்மை செலுத்தி அதன் எண்ணப்போக்கையும், செயற்பாட்டையும் வடிவமைக்க முன்வைக்கப்பட்டது. அப்படியிருந்தும், ஸ்லோவேனிய சமாதான ஆராய்ச்சியாளரான விளாஸ்டா ஜலூசிக் ஒருமுறை தெரிவித்ததுபோல, "வெற்றுத் துவாரம்" ஒன்று அங்கு எஞ்சியிருக்கத்தான் செய்தது. ஏனெனில், இராணுவ எதிர்ப்பு, ஆக்கிரமிப்பு மற்றும் வன்செயல் யுத்தங்களை, உண்டு பண்ணுகின்ற கட்டுமானங்களையும், மனப்பாங்குகளையும் தகர்த்து இல்லாமற்செய்ய முனைகின்ற போது, காரணநிலைப்பட்ட போரொழிப்புவாதமானது, அதற்குமாறாக, நிரந்தர சமாதானத்தை முன்னெடுக்கின்ற கட்டுமானங்களையும், மனப்பாங்கையும் உருவாக்கவிழைகிறது. ஆகவே சுருங்கக்கூறின், காரணம்சார் போரொழிப்புவாதமும், அதனுடன் ஒப்பிடக்கூடிய அணுகுமுறைகளும், சமாதானத்தின் ஆக்கம் மற்றும் கட்டுமானம் என்பவற்றைநோக்கி முடுக்கிவிடப்பட்டுள்ள "ஆக்கபூர்வமான போரொழிப்பு வாதம்" எனவும் விபரிக்கப்படலாம்.

## 2. ஒரு புதிய உலக ஒழுங்கமைப்பு

1918இல் அல்பிரட் பிரைட் என்பவரால் தெளிவுற வகுத்தமைக்கப்பட்டவாறு, காரணநிலைப"பட்ட போரொழிப்புவாதத்தின் செந்நெறி சார்ந்த கோட்பாடானது, "புதியதொரு உலக ஒழுங்கினை" நிலைநாட்டிக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டது (பிரைட் 1918, 42) இது புதிய வடிவிலான ஓர் ஆளுகின்ற முறையாகும். இது, மரணம், தீர்ப்பு, விதி, என்பனவற்றுள் வேரூன்றி நிற்பதல்ல. மாறாக, "செயல் நோக்கங்கொண்ட சமாதான உணர்வொன்றினால் தூண்டப்பட்டதான" முகாமைத்துவம் செய்யத்தக்க அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டதாகவே அது உள்ளது (பிரைட், அதேநூல்). இப்புதிய உலக ஒழுங்கானது, அரசுகளிடையே ஏலவே ஆரம்பிக்கப்பட்டதும், ஓர் "ஒப்பந்த சமூகம்" அல்லது சமூக ஒப்பந்தத்தில் முடிவுற இருப்பதுமான "தேசங்களின் வெற்றிகரமான இணைவு" என்னும் ஒரு செயன்முறையின் விளைவாக அமைவதென வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. இது மோதுகையை இல்லாதொழிப்பதற்கல்ல, ஆனால், தற்போதைய சொல்வழக்கின்படி மோதுகை மாற்றுநிலையாக்கம் என்று அறியப்பட்டுள்ள ஒரு நிலைக்கு இட்டுச்செல்லும் "சர்வதேச உறவுகளை வன்முறைகளிலிருந்து மீட்டு, சட்டவழிமுறைகள்மூலமான முகாமைத்துவத்திற்கு முற்றிலும் பொருந்திவரக்கூடியவாறு அவற்றை ஆக்குகின்ற ஒரு பண்புடன் மோதுகை செல்லும் வகையிலான அவற்றின் மீள்வடிவமைப்பு" (பிரைட் 1918, 12). "மோதுகையின் பண்பினை மாற்றுநிலையடையச் செய்தல்"என்னும் பொருள்படும்.

மோதுகை மாற்றுநிலையாக்கமானது, தற்போதைய சமாதானக்கோட்பாட்டு விவாதத்தில் "மோதுகையை நாகரீகமயப்படுத்தல்" என்பதால் உணர்த்தப்படும் பொருளையே தெளிவாகக் கொண்டுள்ளது (செங்காஸ் 1994 6, வொக்ட் 1996).

காரணநிலைப்பட்ட போரொழிப்புவாதத்தின் செம்மைசார் கோட்பாட்டின் படி, அரசுகளின் உள்ளே காணப்படும் மோதுகைகளின் (உள்ளக மோதுகைகள்) நாகரீகமயப்படுத்தும் முகாமைத்துவமானது-வெற்றிகரமான "இணைவொன்று" ஏற்கனவே இடம்பெற்றுள்ளமையால்-பெருமளவு அல்லது குறைந்தளவு அடையப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்டது, ஆனால் இந்த எடுகோள் இன்றுள்தாக கொள்ள முடியாது. இனிமேலும் தொடர்ந்து ஒரு தரவு நிலைமையாகப் பயன்படுத்தப்பட முடியாது. ஏனெனில் உலகைச் சுற்றவர நோக்கும் போது சர்வதேச சமூகமானது உண்மையான அரசுகளின் ஒன்றிணைந்த ஒரு கழகமாக தொழிற்படுநிலைக்கு இன்னும் வரவில்லையெனினும் இரண்டு அரசுகளக்கிடையே போர் நடைபெறுவதில்லையென்பது நன்கு தெரியப்பட்ட ஓர் உண்மையாகும். அதற்குப்பதிலாக அரசுகளுக்குள்ளே இராணுவம் சார் மோதுகைகள் - சிவில் போர்கள் என்று சொல்லப்படும் அளவுக்கு நிலவுவதைக் காணலாம். இந்நிலைமை -உள்ளக சமாதானத்திற்கான ஒரு நிலையை தோற்றுவிக்கின்றது. இது காரணமாக புதிய உலக ஒழுங்கமைப்பென்ற கருதுகோளானது உலக நிலைப்பட்ட சமாதானத்தைப் பற்றி ஆராய்வதற்கு வேண்டிய இயைபுள்ள ஒரு கருதுகோளானது ஆக்கபூர்வமான சமாதானத்தைப்பற்றி பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு கருதுகோளாகிறது.

## 3. 20 ஆம் நூற்றாண்டில் சமூக, அரசியல் மாற்றுநிலையாக்கம்

சமாதானத்திற்கான காரணங்கள் மற்றும் உள்ளக சமாதானத்திற்கு வேண்டியவை பற்றி ஆராய்கையில், முதலில் மேற்குலக நாடுகளில் இடம்பெற்ற தீவிர மாற்றங்களைப்பற்றியும், ஆனால் மேற்குலகம் சாராத நாடுகளில் சமீபத்திய தசாப்தங்களில் முனைப்பாக இடம்பெற்ற தீவிர மாற்றங்களைப்பற்றியும் கருத்திற்கொள்வது அவசியமாகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் காரண நிலைப்பட்ட போரொழிப்புவாதம் என்ற கோட்பாடு உருவாக்கப்பெற்றபோது, உலகமானது - குறிப்பாகக் கைத்தொழில்மயப்படுத்தப்பட்ட நாடுகளில் பெரும்பாலானவை - அமைப்புரீதியில் பெரும்பாலும் விவசாய நாடுகளாகவே இருந்தன. இவ்விடயம்தொடர்பாக அதிகம் எழுதப்படாவிட்டாலும், கடந்த நூறு வருடகாலங்கள் (1900-2000) பாரம்பரிய விவசாயப் பொருளாதாரத்தை உலகெங்கும் அரித்து, நாசமாக்கிய நூற்றாண்டுகாலம் என வரலாற்றில் பொறிக்கப்படும் ("விவசாய சிறுகுடியினரின் அழிப்பு"). இன்று, பெரும்பான்மையான மக்களைப் பொறுத்தமட்டில், உயிர்வாழ்ந்தால் போதும் என்ற தன்மையிலான பொருளாதாரங்கள் மலையேறிவிட்டன. மாறாக, அவர்கள் இன்று வாழ்வது முற்றுமுழுதாக அதிகரித்துச்செல்லும் உலகளாவிய ஆய்வுப்பரப்புக் கட்டுக்கோப்புடனான வர்த்தக மயப்படுத்தப்பட்ட அல்லது சந்தைமயப்படுத்தப்பட்ட பொருளாதாரங்களுக்குள்ளேயே ஆகும். கிழக்காசிய நாடுகளையும் மத்திய ஆபிரிக்க நாடுகளையும் தெளிவான வேறுபாடுகளுக்கு உதாரணமாகக்காட்டினாலும், இப்பொருளாதார இடைமாற்ற நிலைக்கு வளர்முக நாடுகளும் விதிவிலக்கல்ல.

பாரம்பரிய கிராமியக் கட்டுக்கோப்பில் உள்ள விவசாயசமூகங்களுடன் பெரிதும் வேறுபட்டநிலையில் இப்புதிய சமூகப் பொருளாதார சூழலானது மக்களின் நோக்கெல்லையையும், செயற்பரப்பையும் பெரிதும் விரிவடையச்செய்துள்ளது. கட்டமைப்புரீதியான மாற்றங்களுடன் தொடர்புபட்ட நகரமயமாக்கலானது தொடர்பாடல்களை அதிகரிப்பதுடன், வரலாற்றில் முதற்தடவையாக ஒரு பரந்த அடிப்படையில் மக்கள் தம்மைத்தாமாகவே அரசியல்ரீதியாக ஒழுங்கமைத்துக் கொள்ளவும் அனுமதிக்கிறது. அதேவேளை, பெருந்திரளானோர் பெற்ற எழுத்தறிவு, பரந்துபட்டதும் மிகப்பயனுறுதி வாய்ந்ததுமான அறிவாற்றலின் பரம்பரைக்கு வழிவகுத்தது. வேறுவார்த்தைகளில் கூறுவதானால், அவ்வெழுத்தறிவானது ஆய்வறிவுசார் விடுதலைக்கும் திறன்கள் புரட்சியொன்றிற்கும் இட்டுச்சென்றது. மக்களின் ஆற்றலளவு வியப்புறுவகையில் அதிகரித்துவந்துள்ளது. ஆகவே, சிலகாலத்துக்குமுன்னர் இந்திய சமூகத்தின் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினருடன் பணிபுரிந்த கன்னியாஸ்திரியொருவர் கூறியதுபோல் "அறியாமையிலிருந்து தன்னாற்றலுணர்வுக்கும், பரந்த உலகுடனான ஓர் இடைத்தொடர்புக்குமான மாற்றமொன்று இடம்பெற்று வருகின்றது (பிராங் பட்டர் அல்கமைன் சைட்டுங், ஜனவரி 6, 1999). பாரம்பரிய சமூகங்களுடன் மாறுபட்டவகையில், இது சமூகத்தில் மேலெழும் நகர்வுக்கான சந்தர்ப்பங்களைத் திறந்து விடுகிறது. மேலும், உலகளாவிய ஊடகத்துறையானது, எதிர்பார்ப்புகளையும், வாழ்க்கைப்பாணிகளையும், ஒப்பிடப்படவும், தெளிவாக்கப்படவும் இடமளிக்கின்றது. உண்மையில், இவ்வாறான சாத்தியங்கள் அல்லது காட்சி பூர்வமான விளைவுகள், இக்காலங்களில் வெறும் பொருளாதார உலகமயமாக்கலைவிடப் பாரிய அரசியல் தாக்கங்களை கொண்டிருக்கக்கூடும்.

இவ்வாறாகப் பாரம்பரிய சமூகங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்ட சமூகங்களாகப் பரிணமிக்கின்றன. அத்துடன், உண்மையில் தமது பாரம்பரிய அடையாளங்கள் எதிர்க்கப்படுகின்ற அல்லது கேள்விக்குரியதாக்கப்படுகின்ற சமூகங்களாக அரசியல் மயப்படுத்தப்பட்டும் உள்ளன. "உண்மைகள்" இனிமேலும் ஸ்தூலமான பதங்களால் வரைவிலக்கணம் வழங்கப்பட முடியாதனவாகியுள்ளன. நீதி மற்றும் நலன்கள்பற்றிய வெவ்வேறுதிசைகளிலான எண்ணப்போக்குகளும், துரிதமாகப் பெருகிவருகின்றன. அரசியல் ஒழுங்கினுக்கு மீள்வடிவமும் மீள்வரைவிலக்கணமும்

கொடுப்பதற்கான கருத்திட்டங்கள் பெருகியுள்ளநிலையில் "நல்ல சமூகத்தை" உருவாக்குவது யாது என்பது ஒரு அடிப்படைப் பிரச்சினையாக மாறுகிறது. புனித அகுஸ்தீனார் மற்றும் அநேக ஐரோப்பியரல்லாத எழுத்தாளர்களால் எழுதப்பட்ட ஒரு விடயமாக இருந்துவந்த "ட்றாங்குயிலிற்றாஸ் ஓர்டினிஸ்" - சமூக ஒழுங்கின் நீடமைதி-இனிமேலும் குறிப்பிட்டுக் காட்டமுடியாத ஒரு விடயமாகிவிட்டது இந்நிலையில் வெளிப்படுவது யாதெனில் தமது அமைப்பைப்பொறுத்தவரையில் மோதுகைக்கும், ஏன் வன்முறைக்கும் கூட, உள்ளார்ந்த சாத்திய வளங்களை மிகுதியாகக்கொண்டிருக்கும் நவீனவடிவங்களிலான சமூகங்களே ஆகும். இவை-சர்வாதிகாரத்தினாலோ அல்லது கொடுங்கோன்மையினாலோ கட்டுப்படுத்தப்படாது விடின், பொது உடன்பாட்டுக்கூறாக இனிமேலும் உருமாற்றப்பட முடியாதவையாகும். இருந்தும், இப்புதிய சமூகபொருளாதார மற்றும் சமூக கலாசார நிலைமைகளின்கீழ், குறுகியகாலத்திலோ அல்லது நீண்டகாலத்திலோ, சர்வாதிகாரமும், கொடுங்கோன்மையும்கூடத் தோல்வியையே தழுவும். ஏனெனில், சமூக கலாசாரரீதியான, சமூக பொருளாதார ரீதியான, அதன் விளைவாக அரசியல்ரீதியான பன்மைத்துவமானது எதிர்க்கப்படமுடியாததுடன், அடையாளங்கள், உண்மைகள், நீதி மற்றும் நலன்கள்குறித்த எண்ணப்போக்குகளின் அரசியல்மயப்படுத்தல் என்பது, சமூகரீதியாக இயங்கும் சமுதாயங்களின் அடிப்படையினின்று அது தோன்றுவதன் நிமித்தம், மாற்றப்படவும் முடியாததாகும். மேலும் இவ்வனைத்தினதும்விளைவாக ஏற்படுவது யாதெனில்-தற்போது உலகின் எல்லா மூலைமுடுக்குகளிலும் கேட்கக்கூடியதாகவுள்ள-அரசியல் பங்கேற்புக்கான கோரிக்கையாகும்.

சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு மோதுகைகள் தம்மை, அரசியல் மோதுகைகளாக முன்வைக்கும்போதும், அரசியல் மோதுகைகள் தம்மை சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு மோதுகைகளாக முன்வைக்கும்போதும் அடிப்படையிலான அரசியல்மயப்படுத்தல் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இன்று அடிப்படையான அரசியல்மயப்படுத்தல் இருந்தபோதிலும், அநேகமான சமூகங்களில் கூர்மையான வடிவத்தில் தலைதூக்கிநிற்கும் முக்கியமான விடயம் சகவாழ்வேயாகும் (செங்காஸ் 1998, 2001). ஒவ்வொருநாளும் உலகைச்சுற்றிலும் இடம்பெறும் அரசியல் நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுவதுபோன்று, சகவாழ்வுக்கு-உச்சநிலையான விடயத்தில்-தெளிவற்ற ஒரு மாற்றீடாகவிருப்பது சிவில் போர்களேயாகும்.

## 4. மோதுகையை சமாதான வழிமுறையில் ஒழுங்கு நெறிப்படுத்திக் கொள்வதற்கான நிபந்தனைகள்

ஆனால் இச்சூழ்நிலையில் சிவில் யுத்தம் எவ்வாறு தவிர்க்கப்படமுடியும்? ஆரம்பத்தில் நாம் வாழுகின்ற இவ்வுலகின் நிலைமாற்றமானது மேற்கு ஐரோப்பாவில் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலும், குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் ஏற்பட்ட விவசாய மற்றும் கைத்தொழில் புரட்சியின் விளைவேயாகும். இங்கேதான் இவ்விடத்தில் வரையறுத்துக்கூறப்பட்ட விடயமான, அதாவது அடிப்படையான அரசியல்மயப்படுத்தலுக்கு மத்தியிலும் சகவாழ்வு வாழ்தல் என்பது கூர்மையடைந்தது அதன்விளைவாக, இவ்விடயங்கள்பற்றிய அனுபவங்கள் மற்றும் விவாதங்களிலிருந்து பெறப்பட்ட சில முடிவுகள் மேற்கு ஐரோப்பாவில் உடன் கிடைக்கக் கூடியனவாக உள்ளன (செங்காஸ் 1994b).

அப்படியானால், நாகரீகமயப்படுத்திய, அதாவது தவிர்க்கமுடியாத மோதுகைக்கான அஹிம்சை வழியான, தீர்வுக்கவசியமான நிபந்தனைகள் யாவை? ஐரோப்பிய அனுபத்தின் ஒளியில் ஆறு மூலைக்கற்கள் அடையாளங்காணப்படமுடியும்.

முதலாவது, படையதிகாரத்தில் அரசாங்கம் கொண்டிருக்கும் சட்டநிலைத்தகவுள்ள ஏகபோக தனிஉரிமையாகும். அதாவது, எந்தவொரு நவீன சமாதான ஒழுங்கிற்கும் மிகவும் முக்கியமானதாக

விளங்கும் சட்டத்தின் ஆட்சியை அடிப்படையாகக்கொண்டு சமூகத்தைப் பாதுகாப்பதாகும். வன்முறைகள்மூலமாக அல்லாமல், வாதங்கள் மூலமாக, அடையாளம் மற்றும் நலன்கள் மீதான பிரசைகளின் இது பற்றிய மோதுகைகளைக் கையாளும் வகையில் அவர்களைக் கட்டாயப்படுத்துவதற்கான ஒரே வழி அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதேயாகும். இந்நிபந்தனைகள் சரியாக நிறைவேற்றப்பட்டால் மட்டுமே மக்கள் செயற்களத்தில் வாதாடல் மூலமாகவும், அதன்பிரகாரம் ஆழ்ந்தாராயும் அரசியல்மூலமாகவும் தமது மோதுகைகளைக் கையாளுமாறு மோதுகையைத் தோற்றுவிப்பதற்கான இயலுமைகொண்ட தரப்பினரை நிர்பந்திக்கமுடியும். எங்கெங்கு படையினரின் ஏகபோக தனிஉரிமை முடிவடைந்து, தொடர்ந்து வந்த பகைமைகளும், போராளித்தலைவர்களும் தலைதூக்க, பிரசைகள் மீளவும் ஆயுதம் ஏந்துகிறார்களோ, அங்கெல்லாம் இந்நிபந்தனைகளின் அதியுயர் முக்கியத்துவம் வெளிப்படையாகப் புலனாகும்-தற்போது உலகெங்கணும் உள்ள இராணுவமோதுகைகளின் பொதுப்படையான அம்சம் இதுவாகும்.

இரண்டாவதாக, படையினரின் அத்தகைய ஏகபோக தனிஉரிமையானது நவீன ஆட்சியாப்பையுடைய அரசினால்மட்டுமே உத்தரவாதப்படுத்தப்படக்கூடிய சட்டவாட்சியின் கீழ்கட்டுப்பாட்டுக்கான தேவையை உருவாக்குகிறது. உண்மையில், நவீன அரசுக்கு இந்தப் பண்பு உதாரணமாகிறது எனலாம். இக்கட்டுப்பாடில்லா தன்மைக்கு, படையினரின் ஏகபோக தனிஉரிமை என்பது தம் விருப்பம்போல் நடந்துகொள்ளும் சர்வாதிகார ஆட்சியை வெறுமனே குறைத்துக் குறிப்பிட எடுத்தாளப்படும் ஒரு வார்த்தைப்பிரயோகம் மட்டுமேயாகும். சட்டத்தின் ஆட்சியென்பது அபிப்பிராயத்தையும், அரசியல் விருப்பத்தையும் உருவாக்குதல், தீர்மானமியற்றும் செயன்முறை மற்றும் சட்ட அமுலாக்கம் என்பவற்றுக்கான “ஆட்டவிதிகளை” வழங்குகிறது. அரசியல்மயப்படுத்தப்பட்ட சமூகங்களில், கணிசமான பிரச்சினைகளில் கடுமையான கருத்து வேறுபாடு காணப்படுவதால், அடிப்படையுரிமைகளின் பட்டியலில் பொதியப்பட்டுள்ள பொதுவான கோட்பாடுகளுக்குச் சமாந்தரமாக இந்த ஆட்டவிதிகளும் இருக்கவேண்டியது அவசியம்.

உள்ளக சமாதானத்திற்கான மூன்றாவது பிரதான நிபந்தனை நவீன சமூகங்களின் பண்புகளாக விளங்குகின்ற பரஸ்பரம் சார்ந்துநிற்றல்களின் வீச்சு மற்றும் செழுமை என்பனவற்றிலிருந்து எழுகின்ற பாதிப்புசார் கட்டுப்பாடாகும். அத்தகைய சமூகங்கள் மிகவும் பலம்பொருந்திக் கிளைத்தனவாக இருப்பதுடன், அவற்றுள் இருக்கும் மக்கள் பரந்த அளவிலான தமது விசுவாசத் தன்மைகளைப் பிரதிபலிக்கின்ற பல்வேறுபட்ட வகிபாகங்களையும் தொடர்ந்து வகிக்கின்றனர். ஒன்றிலிருந்தொன்று பெரிதும் வேறுபட்டசமூகப் வகிபாகங்ககள் மோதுகையின் கூறாக்கல்களுக்கும், அதன் விளைவாக மோதுனைக நடத்தையின் மிதப்படுத்தல் மற்றும் பாவனைசார் கட்டுப்பாட்டு மிதப்படுத்தல் என்பவற்றிற்கும் வழிசமைப்பதை மோதுகைக் கோட்பாடும், யதார்த்தபூர்வ வாழ்க்கையனுபவமும் எடுத்துக்காட்டுகின்றன. நவீன மயப்படுத்துகை மற்றும் நவீன சமூகங்கள்போன்ற சிக்கலான சூழல்களில் பாதிப்புசார் கட்டுப்பாடின்றிச் சமாதான சமூக உறவுகள்பற்றி நினைத்துப்பார்க்கவும் முடியாது.

மறுபுறத்தே, நான்காவதாக பாதிப்புசார் கட்டுப்பாட்டின் இன்றியமையாத்தன்மை காரணமாக, ஜனநாயகரீதியான பங்குகொள்ளல் அவசியமாகின்றது. இனரீதியான பாகுபாடுகள் காரணமாகவோ அல்லது வேறுவகையான பாகுபாடுகள் காரணமாகவோ பொது விவகாரங்களில் மக்களால் ஈடுபடமுடியாமற்போகும் சூழ்நிலைகளில் “சட்டரீதியான அமைதிக்குலைவு” (சிக்மண்ட் புறொயிட் எடுத்தாண்ட சொற்பிரயோகம் Rechtsunruhe) ஏற்படும் அரசியல் மயப்படுத்தப்பட்ட சமூகங்களில் மோதுகைகள் அதிகரிக்குமாயின், அச் சமூகங்களின் விளைநிலமாக மாறக்கூடும். எனவே சட்டரீதியான அபிவிருத்திக்கு வேண்டிய, ஜனநாயகம் என்பது ஒரு ஆடம்பர தேவைப்பொருளல்ல, மாறாக, மோதுகைகளை சமாதானமாக தீர்ப்பதற்கான ஒரு முன் நிபந்தனையாகும்.

இருப்பினும், ஐந்தாவதாக சமூகநீதியை உறுதிப்படுத்துவதற்கான தொடர்முயற்சிகள் இருந்தால்மட்டுமே அரசியல்மயப்படுத்தப்பட்ட சமூகங்களில் மோதுகை முகாமைத்துவத்திற்கான இந்த அணுகுமுறை நிரந்தரமானதாக இருக்கும். நவீன முதலாளித்துவ சமூகங்களில் பெரும்பாலானவை சந்தை நிலவரங்களினடிப்படையிலேயே இயங்குகின்றன. அத்துடன் சமூக சமத்துவமின்மையும் எப்போதும் அவற்றில் காணப்படும். இச்சமத்துவமின்மைகளுக்கு முகம்கொடுக்கக் கூடிய முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படாவிடில், அத்தகைய சமூகங்களில் ஆழமான சமூகப்பிளவுகள் உருவாகும். எனவே, ஆட்டவிதிகள் தொடர்ந்தும் நியாயபூர்வமானதாக இல்லாதிருப்பதன் காரணத்தால், ஆட்சியாப்பு நிலைப்பட்ட அரசின் நம்பகத்தன்மையானது பாதிப்புள்ள தனிநபர்களால் அல்லது குழுவினரால் கேள்விக்குரியதாக்கப்படாதிருக்கும்பட்சத்தில் பகிர்ந்து கொள்ளத்தக்க நீதியை உறுதிப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சியொன்று எடுக்கப்படுவது அவசியம். இப்படியல்லாமல், சமூகநீதியையும் நியாயத்தையும் எய்துவதற்கு எடுக்கப்படும் போலித்தன்மையற்ற முயற்சிகள் ஆக்கபூர்வமான மோதுகை முகாமைத்துவத்திற்கு வலுச்சேர்ப்பதுடன் பொது நிறுவனங்களுக்குச் சட்டநிலைத்தகமையையும் வழங்குகின்றன.

அடையாளங்களை ஒன்றிணைத்து வெவ்வேறு நலன்களுக்கிடையே சமநிலையொன்றை அடைவதற்குப் பொது அரங்கிலே நியாயபூர்வமான வாய்ப்புக்கள் இருக்குமாயின், மோதுகை முகாமைத்துவத்திற்கான அணுகுமுறையானது நம்பகமான முறையில் அகவயப்படுத்தப்பட்டுள்ளது என்றும், சமரசத்தை அடிப்படையாகக்கொண்ட தேவையான சகிப்புத்தன்மை உள்ளிட்ட- மேதுகை முகாமைத்துவத் திறமையானது அரசியல் செயற்பாட்டின் ஒன்றிணைந்த ஆக்கக்கூறாக மாறியுள்ளது எனவும் கருதப்படலாம். படையின் சட்டபூர்வமான ஏகபோக தனிஉரிமை, சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகம்-சுருங்கக்கூறின், நவீன, ஜனநாயக- யாப்புரீதியான அரசானது அரசியல் பண்பாட்டில் நிலைநிறுத்தப்பட்டதாக மாறியுள்ளது. எனவே, ஆக்கபூர்வமான மோதுகை முகாமைத்துவத்தின் பண்பாடானது சமூகத்தின் உணர்வுபூர்வமான அடிப்படையாக மாறுகிறது. காத்திரமான நடவடிக்கைகள் ("சமூக நீதி") நிறுவனமய அமைப்புக்கும், மக்களின் உணர்ச்சியில" காணப்படும் எதிர்மறையற்ற பிரதிபலிப்புக்குமிடையே ("பொது உணர்வு") முக்கியமான ஒரு பாலமாக மேற்கிளம்புகின்றன. இறுதியாக ஏற்படுவது யாதெனில், ரால்ப் டாஹ்றென்டோப் என்பாரின் வார்த்தையில் கூறுவதானால் "பிணைப்புப் பொருட்கள்" வேறு வார்த்தைகளில் சொல்வதானால் ஆழமாக வேரூன்றிய அரசியல் மற்றும் பண்பாட்டு பிணைப்புக்களும் மற்றும் சமூக பண்பாட்டு பற்றுறுதிகளும் ஆகும்.



## 5. ஆக்கபூர்வமான மோதுகை முகாமைத்துவ பண்பாட்டின் தயங்குநிலை வளர்ச்சி

ஆக்கபூர்வமான மோதுகை முகாமைத்துவத்தின் அரசியல் பண்பாடானது நவீன சகவாழ்வின் ஆரம்பத்தைக் குறிக்கவில்லை. மாறாக, வரலாற்றுச் செயன்முறைக்கு அவ் அரசியல் தாமதமாக வந்ததோர் விடயமாகும். மேலே அடையாளங்காணப்பட்ட ஐந்து மூலைக்கற்களைப் போன்று அதுவும் தோன்றுகையில், கடந்தகாலத்தில் ஐரோப்பாவின் பாரம்பரிய பண்பாட்டில் - அதாவது முன் நவீன பண்பாட்டிற்கு முன்பிருந்த பண்பாட்டில்- அது ஓரிடத்தினை வகிக்கவில்லை. மாறாக, மேலே மூலைக்கற்கள் எனக்குறிப்பிட்ட ஒவ்வொன்றினதும் எழுச்சியானது "தயக்க நிலைப்பட்ட ஒரு முறைவழியாகவோ அன்றேல் வேறு ஏதோ ஒரு பின்புலத்தில் தோன்றிய ஒன்றாகவோ விபரிக்கப்படமுடியும் (செங்காஸ் 1998, 2001). ஏனெனில், வரலாற்றுரீதியாக நோக்கின், போரில் ஏற்படும் தோல்வியின் விளைவாகவே ஆயுதக்களைவு எப்போதும் இடம்பெற்றுவந்துள்ளது. பலமற்றவர்களை பலம் பொருந்தியவர்கள் வென்றார்கள், கீழ்நிலையினரை மேல்நிலையினர் வென்றார்கள். சட்டத்தின் ஆட்சியென்பது விவாத நிலைப்பட்ட தரப்பினரிடமிருந்து அச்சுறுத்திப்பிடுங்கப்பட்ட இணக்கங்களின் ஊடாகவே வளர்ந்தது.

வரலாற்றுரீதியான சச்சரவுடனான சமரச இணக்கப்பாட்டிலிருந்தே உருவானதுடன், இயல்பாகவே மக்களால் விரும்பப்படாததாகவும் இருந்தது. இருப்பினும் - வலுவற்ற அதிகார உறவுகளில் அது ஒரு தற்காலிக சலுகையாகவே நோக்கப்பட்டது. பாதிப்புக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில், நன்கு வரையறை செய்யப்பட்ட நுண்ணிதான சூழமைவுகளிலே சுயநிர்ணயவாழ்க்கையானது, தமக்கென உரிய அசைவியக்கத்தைக் கொண்டவற்றுடன் தன்னைத்தொடர்புபடுத்தி கருமப்பாட்டு முறைமைகளுடன் இணைத்துப் பார்க்கும் போது எப்போதும் விரும்பத்தக்கதாகவே நோக்கப்பட்டது. மிகப் பிந்தியகட்டத்தில் சிக்மண்ட் புறொயிட்டுக்குப்பின்னர் பாதிப்புக் கட்டுப்பாடானது விருப்பக்கோட்பாடு அன்றி, ஆனால் யதார்த்தக் கோட்பாட்டின் ஏவுதல்களினாலேயே ஆளப்படுகிறது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இன்னொரு வகையில் சொல்வதானால், போதுமான அளவு உணர்வுசார் மேம்பாடு இல்லாமல் அதை அடையமுடியாது.


வலுவுடன் நிலையூன்றிய சக்திகளுக்கு எதிராக வளர்ந்து செல்லும் பங்கேற்புமுறைப் போராட்டமும் எப்போதும் இடம்பெற்றது. சமத்துவமின்மையை விசேட குணாதிசயமாகக்கொண்ட ஓருலகத்தில், நியாயத்திற்காகவும், பகிர்வு அடிப்படையிலான நீதிக்காகவும் நடக்கும் போராட்டத்திற்கும் இது பொருந்தும். ஓவ்வொரு விடயத்திலும் அரசியல் பங்கேற்பும், நியாய பூர்வமான பங்கீடும் அதிகாரங் கொண்டோரிடமிருந்து பலவந்தமாக வெளியில் எடுக்கப்படவேண்டும். இறுதியாக, ஆக்கபூர்வமான மோதுகை முகாமைத்துவ பண்பாடானது சூழ்நிலைகளின் அதிர்ஷ்டவசமான ஒரு இணைவின்போதே நிறுவப்படமுடியும். அதாவது, மக்களின் உணர்ச்சிகளில் இறுதியாக உறைந்துள்ள, வரலாற்றில் குறிப்பிடத்தக்கதும், ஒன்றையொன்று வலுப்படுத்துவதுமான யதார்த்தமாக மேலே விபரிக்கப்பட்ட பண்புநயத்தின் ஒவ்வொரு மூலைக்கல்லும் மாறும் போதுதான் அது நிறுவப்படமுடியும். சாலவும் நன்மைபயப்பதான இந்த நிபந்தனைகளின் கீழ் மட்டுமே மோதுகை நாகரீகமயமாக்கலும், அத்துடன் அடிப்படை அரசியல் மயப்படுத்தலினால் மேலாண்மை செலுத்தப்படுகின்ற ஒரு சூழலிலேயே வேரூன்றுமென எதிர்பார்க்கப்படுகின்ற வன்முறையற்ற மோதுகை முகாமைத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடும் நிலவமுடியும்.



மேலே விபரிக்கப்பட்டவாறு, ஐரோப்பிய சூழலிலே படிப்படியாக வளர்ந்து மேற்சென்ற மோதுகைகளின் வரலாற்று நடவடிக்கைகளின் ஊடாகவே ஈட்டப்பெற்றது எனலாம். இவற்றினுடாக மேற்கிளம்பியுள்ளது நாகரீக அறுகோணி எனக்குறிப்பிடப்பெறும் ஆட்சியாப்புரீதியான, நிறுவனரீதியான மற்றும் பொருண்மை சார்ந்த பரிமாணங்களைக்கொண்ட “நாகரீக அறுகோணி” என்று முத்திரை குத்தப்பெறுவதான (செங்காஸ் 1974பி, கல்லீப் 1997) மோதுகை முகாமைத்துவத்தின் மேற்கிளம்பும் ஒரு நல்ல மாதிரியம் ஆகும். அது குறிப்பிட்ட சில மனோபாவங்களைக் கொண்டது. மேலும் இந்த அம்சம் அழுத்திக்கூறப்படவேண்டியது.படவேண்டியது. அது நாகரீக மயப்படுத்தற் செயன்முறையின் ஒரு செயற்கையான பெறுபேறாகும்.

வரம்புகளற்ற ஆட்சிக்குரிய கோரிக்கைகள், குறிப்பிட்ட நலன்கள்மீது உறுதிப்பாடு, குறிப்பிட்ட அடையாளம்மீதான அழுத்தம், தன்னுடைமை உணர்வுகொண்ட தனிநபர் தத்துவம் மற்றும் பிரசார அழுத்தம் போன்ற, விடுதலையடைந்த மக்கள்சமூகங்களில் காணப்படும் அடிப்படை அரசியல்மயப்படுத்தலை வர்ணிக்கின்ற நிபந்தனைகள் எல்லாம் சிலவழிகளில் “இயல்பானவை” என்றும், அதேவேளை சகிப்புத்தன்மை, ஆட்டவிதிகள்பற்றிய ஒரு விழிப்புணர்வு, மிதவாதம், அதிகாரங்களின் பிரிகை, சமரச இணக்கத்திற்கான விருப்பம் மற்றும் தன் சொந்த நலன்களைக்காட்டிலும் அதிகமானவற்றிற்கான கூருணர்வு என்பன “செயற்கைத்” தனமாக உள்ளனவாக கருதப்படுகின்றன. அதாவது, கடின உழைப்புடனான கூட்டுக்கற்கைச் செயன்முறைகளின் விளைவுகளாக விளங்குகின்றன என்றும் ஏற்றுக்கொள்ளக்கூடியவகையில் வாதாடமுடியும். குறிப்பாக ஐரோப்பாவில் பரந்த அடிப்படையிலான இவ்வனைத்து நாகரீக மயப்படுத்தல் சாதனைகளும் பழைய சுதேச ஐரோப்பிய

பெட்டி : 1 நாகரீக அறுகோணி






சொத்துரிமையின் ஆதிக்கத்திற்குட்பட்ட சமூக பாரம்பரியங்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுச்சிபெற்ற நவீன வர்க்க சமுதாயம் என்பவற்றை எதிர்கொண்டு அவற்றுடன் மோதுகையிட்டு - அரிதிற் பெற்றவையாகும். ஆகவே, இன்றைய ஜனநாயகவழி யாப்புரீதியிலான அரசு என்பது கலாசார அல்லது மரபணுரீதியான முன்தகுதிகளின் விளைவன்று. மாறாக, ஒரு தொடரான புதிது புனைதல்களின் விளைவே அதுவாகும் அத்துடன், இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுக்கால ஐரோப்பிய வரலாற்றின் இறுதி 150 வருடங்களுக்குள்ளேயே இவ்வரசானது தனது சமீபத்திய அபிவிருத்தியை வெளிப்படுத்தியது (செங்காஸ் 1998, 2001).

## 6. சமூக மற்றும் அரசியல் நிலைமாற்றங்களுக்கான மாற்றுப் பதிற்செயற்பாடுகள்

ஐரோப்பாவானது வேதனையோடும், சிரமங்களோடும், பட்டுணர்ந்து அறியும் முறையைக் கடைப்பிடித்து, நேர்வழியாகவும், சுற்றுவழியாகவும் ஏன், தவறான வழியாகவும்-(ஆரம்பத்தில் அச்சுறுத்தல் என உணரப்பட்ட பன்மைத்துவத்தின்போது அதற்குத்தீர்வாக சகிப்புத்தன்மையைக் கடைப்பிடித்தமை இதற்கு உதாரணம்) - கற்றுக்கொள்ளவேண்டியிருந்த பாடம், விரிவாக இல்லாவிட்டாலும், கோட்பாட்டளவில், உலகின் ஏனைய பாகங்களில் மீளவும் கற்றுக்கொள்ளப்படும். இங்கும், மேலே குறிப்பிட்டவாறு, பாரம்பரிய சமுதாயங்கள் சமூகரீதியில் நகரும் சமுதாயங்களாக இடைநிலை பெயர்ந்ததனால் அடிப்படை அரசியல்மயப்படுத்தல் புதிது புதிதாய்ப் பெருகிவரும் நிலையில், சகவாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை நன்கு கையாள்வது என்பது இனிமேலும் பின்போடப்படமுடியாத ஒருபணியாகும். இருந்தும், பாரம்பரியமான ஐரோப்பாவில், ஐரோப்பியரல்லாத பாரம்பரிய சமூகங்களின் வழமையான பண்பாட்டினுள் இந்த நவீன

பிரச்சினைகளுக்கான உருப்படியான பதிற்குறிகள் எதுவும் இல்லை. இச்சமூகங்களின் சுயபுலனுணர்வானது ஒழுங்கமைதிவாய்ந்த உலகை மையமாகக்கொண்டது. குறிப்பாகப் பண்டைய கிரேக்க இலத்தீன் தொல்சீர் ஐதீகங்களில் ஒழுங்கமைப்பெற்றுள்ள பிரபஞ்சம், சமூகம் மற்றும் அதன் வாழும் மக்கள் ஆகியவை ஒரு தனி அலகாக கருதப்பட்டார்கள். ஆனால் அசைவற்ற ஒரு படிநிலையினராக அந்தப் பிரபஞ்சமும், சமூகமும் அதன் மக்களும் பார்க்கப்பட்டனர். அந்த அமைப்பினுள் அதிலிடம்பெறும் ஆற்றுகையாளர்களின் பாகங்கள் ஏற்கனவே விதிக்கப்பெற்றிருந்தன. வரலாற்றுரீதியான சுயபுலனுணர்வு என்பது மீண்டும் மீண்டும் சுழன்றுவருகின்ற இயல்பையுடைதாய் இருந்ததால், நவீன அர்த்தத்தின்படி, உண்மையாகவே வரலாற்றுப்பழமையானவையாக இருக்கவில்லை. ஏனெனில் இச்சுழற்சிகள் ஆண்டுமுழுவதும் காணப்படும் இயற்கையின் சந்தங்கள்போல் அல்லது அரசியல் வாழ்க்கைபோல் (பேரரசுகளின் அல்லது வல்லரசுகளின் உதயம், மலர்வு மற்றும் உதிர்வு போல்) நித்தமும் அதன் ஆரம்பப்புள்ளிக்கே மீண்டும் வந்தன. பொது உண்மைகளின் பன்மைத்துவ எண்ணப்போக்கானது நினைத்துப்பார்க்கமுடியாத ஒன்றாய் இருந்தது. ஏனெனில், “ஒரேயொரு உண்மை” மட்டுமே இருந்தது.

இத்தரவுகளின்படி, குறிப்பாக சமூக மற்றும் அரசாங்க நிறுவனங்கள் அமைப்பியல் சார்ந்த அலகுகளாகப் பார்க்கப்பட்டால், மோதுகைகள் என்பன இயல்பான சமூக உறவுகள்மட்டில் செயலற்றவை என்றே நோக்கப்படும். புராதன சீனாவிலும் ஏனைய இடங்களிலும் நிகழ்ந்ததுபோல் “வானுலகின் கீழுள்ள ஒழுங்கீனம்” என்று மோதுகைகள் கருதப்பட்டன. எனவேதான் இப்போது நிலவும் குழப்பங்கள் (லுவான்) ஏற்படுகின்றன. அதற்கு எதிரிடையான சிந்தனை இக்குழப்பங்களை முறியடிப்பதற்கான ஒரு பங்களிப்பாக, அதாவது ஒழுங்கமைதிகொண்ட இயல்பான உலக நியதியை மீள ஏற்படுத்துவதை நோக்காகக்கொண்ட குளறுபடி நிலைக்கான முகாமைத்துவ உத்தியாகப் பார்க்கப்பட்டது. சகவாழ்வின் நவீன பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு மூலோபாயமாக இவ்வெண்ணப்போக்குகள் உதவப்போவதில்லை. இக்காரணத்தினாலும், உலகின் ஏனையபாகங்களிலுள்ள சூழ்நிலைக்கட்டாயத்தினாலும், மோதுகை முகாமைத்துவத்தின்மீதான புதிய கண்ணோட்டங்களும், ஆகவே அதன் காரணமாக நவீன யுகத்திற்குப் பொருத்தமான உள்ளக சமாதானத்திற்கான புதிய அணுகுமுறைகளும், வடிவங்களும் விருத்திசெய்யப்படவேண்டும்(செங்காஸ் 1998, 2001).



மேற்குலகிலில் ஏற்பட்ட அபிவிருத்தியில் தோன்றியது போலல்லாமல், ஐரோப்பா சாராத உலகில் நிலவும் ஒருங்கு நிலைப்பட்ட கற்றல் நடவடிக்கைகளின் போது உள்ளூரிலே ஏற்படும் தீவிர சமூக, பண்பாட்டு தள மாற்ற நடவடிக்கைகளால் தீர்மானிக்கப்படுவது மாத்திரமல்லாமல், மேற்குலகில் நிலவும் அபிவிருத்திகளாலும் அவை வடிவமைக்கப்படுகின்றன. இச்சூழமைவில், ஐரோப்பாவை சாராத உலகில் நான்கு தெளிவான பதிற்குறிகள் அவதானிக்கப்படமுடியும்.

முதலாவது, மேற்கின் சவாலையும் அதுபோல் அதன் அனுபவங்களையும் தீர்வுகளையும்” பிரதிசெய்கின்ற நவீன போக்குடையதும் பின்பற்றக்கூடியதுமான பதிற்குறிகள் ஒருவரது சொந்தப் பாரம்பரிய பண்பாடு உள்ளிட்ட ஒருவரது சொந்தப் பாரம்பரியத்தின் சுமைக்கு எதிரான போராட்டத்தில், மேற்கே ஒரு முன்மாதிரியாகக் கொள்வதாகும். இருபதாம் நூற்றாண்டின் முன் அரைக்காலத்தில் சீனா உள்ளிட்ட பல நாடுகளில் அத்தகைய பதிற்குறிகள் அவதானிக்கக் கூடியனவாயிருந்தன. ஆனால், காலத்தின் தேவைக்கேற்றவகையில் அவற்றால் நின்றுநிலைக்க முடியவில்லை. ஆயினும், இன்று கிழக்காசியாவின் நான்கு புதிய கைத்தொழில்வள நாடுகளில் (NIC) கொரியா மற்றும் தாய்வான் ஆகிய இருநாடுகளிலும் இப்பதிற்குறிகள் நன்கு வெற்றியளித்துள்ளதாக நிரூபணமாகி வருகின்றன. தத்தமது உள்நாட்டுக் அமைப்புக்கோலம் எதுவாயிருப்பினும் இந்த இளம் கைத்தொழில் நாடுகள், முன்னோக்கிப் பார்க்கக்கூடிய எதிர்காலத்தில், மேற்குலக நாடுகளின் அரசியல் பண்பாட்டினின்று அடிப்படையில் வேறுபடாத பண்பாட்டைக் கொண்ட “புதிய ஜனநாயக வழியொழுகு நாடுகளாக” உருவாகிவருகின்றன. நவீனமயப்படுத்தல் மாற்றங்களுக்கான குமுறல் ஏற்பட்டு, சகவாழ்வுப்பிரச்சினை

கூர்மையடைகையில் பாரம்பரியவாதிகள், பிற்போக்காளர்கள், அதாவது, பொதுவாகப் பழைமைவாதிகள், என்ற பல்வேறு போர்வைகளில் தோன்றுகின்றனர். அவர்கள், வரலாற்றின் ஓட்டத்தைப் பின்தள்ளிவிடவும், குறிப்பாக, நவீன மயப்படுத்தலின் முன்னோக்கிய பயணத்தை நிறுத்தவும் முற்படுகின்றனர்.

இரண்டாவது வகைப் பதிற்குறியானது உலகம் முழுவதும் எங்கெங்கு மேற்கத்தைய நவீனத்துவம் பாரம்பரிய வாழ்க்கைமுறையுடன் மோதுகின்றதோ, அங்கு அவதானிக்கப்படமுடியும். இந்தச் சூழமைவில் காந்தியை ஒரு உதாரணமாகக் குறிப்பிடமுடியும். ஏனெனில், அவரது வாழ்க்கைத் தத்துவமானது கிராமப்புறஞ் சார்ந்ததாகவும், வர்த்தகத்திற் கெதிரானதாகவும், அனைவரின் சமவுரிமைகளையும் கருத்தில்கொண்டதாகவும் இருந்தது. கையாளக்கூடிய ஒரு கட்டுக்கோப்பினுள் சிறிய அலகுகளையும், கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையிலான நேரடியான ஜனநாயகத்தையும் அவர்முறைமை ஆதரித்தது. இன்று, இதேபோன்ற எண்ணக்கருக்கள், குறிப்பாக மத்திய ஆபிரிக்காவில் இன்னும் காணப்படக் கூடியனவாகவுள்ளன.

மூன்றாவதாக, எங்கெங்கு இவ்வாறான குமுறல்கள் இடம்பெற்றனவோ அங்கெல்லாம் நவீனத்துவத்தை அரைப்பங்காகவே ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் இருந்ததை அவதானிக்கமுடியும். மேற்கத்திய செய்முறைகள்பற்றிய ஆர்வங்கொண்டவர்கள் அவர்கள். ஆனால், தமது சமூகத்தை ஏனைய அனைத்து அறிவியல் வலுவிற்கு உட்படாது பாதுகாக்கவே முனைகின்றனர். கடந்த நூற்றாண்டின் மத்தியிலிருந்து ஜப்பான் இப்போக்கை வெற்றிகரமாகக் கடைப்பிடித்துவந்தது. ஆனால் உண்மையாக நிலவிய சோஷலிஸம் எனப்படும் பொதுநலக்கூட்டுத்தத்துவம் தோல்வியடைந்தது. மிகச்சமீபகாலத்தில் “சிங்கப்பூர் சிந்தனை” ஆனது பாதி நவீனத்துவத்துக்கு ஒப்புயர்வற்ற ஒருதாரணமாக மாறியுள்ளது. மற்றுமொரு உதாரணம் இஸ்லாமிய அடிப்படைவாதமாகும். எவ்வாறாயினும் சிங்கப்பூரிலோ, சீனாவிலோ, இஸ்லாமிய சமூகங்களிலோ அல்லது வேறெங்கிலுமோ- இவ்வகையான விதிமுறைக் கட்டமைப்புக்குரிய ஆளுகையின் நிகழ்ச்சித் திட்டங்களுடன், இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் வேரூன்றிய உலைமாக்ககளின் அணுகுமுறைகள்மீது நம்பிக்கைகொண்ட இடங்களில்கூட, அதிகரித்த சிக்கலுடனான பன்மைத்துவத்தில் வளர்கின்ற ஒரு சமுதாயத்தின் அரசியற்பிரச்சினைகள் தீர்க்கப்படவோ அல்லது தீர்வுக்கண்மையில்தானும், கொண்டுவரப்படவோ முடியாது. பின்னர் கூறப்பட்ட இந்த முயற்சிகள் (தற்போது ஈரானில் உள்ளதுபோன்று) மிகவும் சுவாரஸ்யமான வரலாற்று சமாந்தர நிகழ்வுகளைக் கொண்டுள்ளன. ஆயினும் அதேவேளை நவீனத்துவ வாதத்திற்கெதிரான உலைமாக்கள்சார் எதிர்ப்புரட்சியின் பயனின்மையையும் எடுத்துக்காட்டுகின்றன. இது, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதியில், பிரெஞ்சு புரட்சிக்கான பதிற்குறியின்போது ஐரோப்பாவிலும், குறிப்பாகப் பிரான்சிலேயே கூட அவதானிக்கப்படக் கூடியதாயிருந்தது. இவ்வாறான உலைமாக்கள்சார் நிகழ்ச்சித்திட்டத்தில் பன்மைவாதமானது, நடைமுறையில் சமுதாயக்கட்டமைப்பைச் சிதைக்கின்றதும், பாரம்பரிய பெறுமானங்கள் மற்றும் பண்பாடு என்பனவற்றைச் சீர்குலைக்கின்றதும், ஒழுக்கக் குருட்டுத்தன்மைக்கு (ஜஹிலிய்யா) சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்குவதுமான, நன்னெறிக்குப்புறம்பானதோர் எண்ணக்கருவாகவே கருதப்பட்டது. கருதப்பட்டும் வருகிறது. மறுபுறத்தே, கட்டுப்பாடுகளுக்குட்படாத, மத உணர்வுகளாற் தூண்டப்பெற்ற அதிகாரப் பிரயோகமே நவீனகாலத்திற்கு முற்றிலும் பொருத்தமானது என அவர்கள் கருதினர்.

ஆயினும், இறுதியாக ஐரோப்பா சாராத உலகினில் எப்போதெல்லாம் நவீனத்துவத்திற்கும், பாரம்பரியங்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டுச் சமூகக் குமுறல்கள் தோன்றுகின்றனவோ, அப்போதெல்லாம் புத்தாக்கம் அவசியப்படும். ஐரோப்பியமல்லாத பிரதேசங்களில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் ஐரோப்பாவிலும் ஏற்படுமா என்பது நிச்சயமாக முன்கூறப்படமுடியாததாகும். இருப்பினும், ஐரோப்பாவின் அனுபவங்கள் சில இடங்களில் மீளவும் ஏற்படக்கூடும். பராம்பரிய பண்பாட்டு நவீனத்துவ போக்குகளால் எதிர்கொள்ளப்பட்டு சமூகங்கள் ஒரு கட்டமைப்பு அடிப்படை ரீதியான, எனவே, அதன்விளைவாக மனோரீதியான இயல்மாற்றங்களுக்கு உள்ளாகும்போது இப் பண்பாடுகள், வேதனைக்குரிய,

தவிர்க்கமுடியாவிதத்தில், தமக்குள்ளேயே முரண்பட்டுநிற்கும் அவசியமான கூட்டுக்கற்கைச் செயன்முறைகளுக்கு இந்நிலைமை வழிகோலினாலும், விரும்பத்தகாத, பிரச்சினைக்குரிய நிலைமைகளும் உடன் தோற்றுவிக்கப்படலாம்.

"வரலாற்றின் அந்தம்" (புக்குயாமா 1922) என்னும் கோட்பாட்டிற்கமைய, மிச்சம் மீதமில்லாமல், நவீனத்துவவாதத்தின் அனைத்துப் புதிய மாறுதல்களும் மேற்குலக ஐரோப்பிய நாடுகளில் கைகூடப்பெறப்பட்டுள்ளதுடன், சகவாழ்வில் எழும் பிரச்சினைகளைத் தீர்க்கும்விடயத்தில் ஐரோப்பா சாராத நாடுகளால் வழங்கப்படுவதற்கும் வேறொன்றும் கிடையாது. ஆயினும், இக்கோட்பாட்டிற்குமாறாக, எதிர்வரும் தசாப்தங்களில் மனிதருள் ஐந்தில் நான்கு பங்கினர், சமூகநகர்வு மற்றும் அடிப்படையான அரசியல்மயப்படுத்துகை என்பவற்றின் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை உள்ளூரில் பரீட்சார்த்தமாகக் கண்டறிவதற்கு, பொதுவாகத் தமது விருப்பத்திற்குமாறாக, மீண்டும் நிர்ப்பந்திக்கப்படுவர். அவர்களது தகைமையை இறுதியாக மெய்ப்பிக்கும் தீர்வுகள் வரைபலகைமீது காண்பிக்கப்படக்கூடிய பண்புசார் எண்ணக்கருக்களாக இடம்பெறுவது என்பது நடக்கமுடியாத ஒன்று. இச்சூழமைவில் நடக்கக்கூடியது யாதெனில் ஐரோப்பிய அனுபவத்தின் மீள் அரங்கேற்றமே ஆகும். சகவாழ்வு மற்றும் நீடித்துநிலைக்கக்கூடிய மோதுகை முகாமைத்துவம் என்பவற்றுக்கான ஏற்பாடுகள், அதாவது வேறுவார்த்தைகளில் கூறுவதானால், நீண்டகால அடிப்படையில் உருப்படக்கூடியதாக விளங்கப் போகும் உள்ளக சமாதானமானது, அரசியல் மோதுகைளின் திட்டமிடப்படாத விளைவுகளாக விருத்திசெய்யப்பட்டிருக்கும்.

இவ்வாறு, ஜனநாயக அரசியலமைப்புரீதியான அரசு, அதன் நிறுவனங்கள் மற்றும் ஒழுக்கப் பண்பமைதி என்பவற்றைநோக்கிய ஐரோப்பாவின் கடினமான, வேதனைமிகுந்த மோதுகைகள் நிறையப்பெற்ற பயணத்தை மேற்கொள்வது அதன் விதியாய் அமைந்தது போல், ஐரோப்பா சாராத அரசுகளுக்கும் அவ்வாறான ஒரு விதி அமையாமல் விடப்போவதில்லை. விளைவுகள் வேறுபட்டதாக இருக்கக்கூடுமாயினும், செயன்முறையானது முக்கியமாக, போலியற்ற புதிதுபுனைதல்கள் உண்மையாகவே இடம்பெறவேண்டுமாயின், ஐரோப்பிய அனுபவத்தைப்போன்றதாகவே இருக்கும். இருப்பினும், பின்னர் குறிப்பிட்ட விடயத்தில், விளைவானது குறிப்பாக, மரபுரீதியான பண்பாட்டின் ஆழ்ந்த பரிமாணங்களை வெளிப்படுத்தாது, மாறாக அதன் சொந்தப் பாரம்பரியங்களுக்கெதிரான புதிய அம்சங்களையே பிரதிபலிக்கும்.



உலகளாவியமட்டத்திலிருந்து பார்க்கையில், இருபத்தோராவது நூற்றாண்டில் மனித இனத்துக்கான பாரிய சவால்களில் ஒன்றாக இருப்பது யாதெனில், நிறுவனமட்டத்தில் பாதுகாக்கப்பட்டதும், மக்கள் மனங்களில் உறுதியாய் நிலைத்திருப்பதுமான சகிப்புத்தன்மையின்கோலங்களில் காணப்படும் பன்மைத்துவத்திற்கான தீர்வைக் காண்பதாகும். இச் சவாலான, உலகம் முழுவதும் துளிர்விடும் சூழல் பிரச்சினைகளின் சுமையைவிடக் குறைவானதல்ல. இருபதாம் நூற்றாண்டின்மீது நாம் எம்பார்வையை மீளச்செலுத்துவோமாயின் இப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டியதன் உடனடித்தேவை புலனாகும். அந்த நூற்றாண்டின் போது சகிப்புக்கான "மாற்றீடுகள்" பின்வரும் காட்டுமிராண்டித்தனமான மற்றும் கொடூரமான வழிகளில் பரீட்சித்துப்பார்க்கப்பட்டன. அவையாவன, புறந்தள்ளுதல், பாரபட்சம், நிறவெறி, வெளியேற்றுதல், இனச்சுத்திகரிப்பு அல்லது இனப்படுகொலை மற்றும் பல்வேறு வடிவிலான சிவில் யுத்தங்கள் (ஹையின் சோன் 1998, டாபக் மற்றும் பிளாட் 1998).

ஆகவே, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த காரணரீதியான போரொழிப்பு வாதத்திற்குமாறானதாக, பன்மைமயப்படுத்தலின் மாற்றமுடியாத பண்பினால் கருதப்படுவது யாதெனில், சமூகங்களுக்கிடையேயான சகவாழ்வின் சட்டபூர்வமான, நிறுவனமயமான, பொருண்மை மற்றும் சகவாழ்வு உளவியல் முறைமையொன்றிற்கான தேடலானது நிகழ்ச்சிநிரலில் முதன்மைபெற்றுள்ளது என்பதாகும். எனவே, உள்ளக சமாதானத்தினை அடைவதற்கான தேவையானது ஒரு சுற்றயல் பிரச்சினையல்ல,

இன்று அது முன்னரெப்போதுமில்லாதவாறு, கடுமையானதும், உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்துவதும் மற்றும் உலகளாவியதுமான ஒருபிரச்சினையாகும். உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பரம்பரையான மற்றும் மரபுரீதியான கட்டமைப்புகளுக்கான அங்கீகாரம் வீழ்ச்சிகண்டுவருகிறது. இதன் விளைவாக, புதிய சமூக மற்றும் அரசியல் கட்டமைப்புக்களுக்கான தேடலினால் உந்தப்பட்ட, நலன்கள் மற்றும் திசைமுகப்படுத்தல் என்பவற்றின் மோதுகைகள், அதிகாரப்போட்டிகள் மற்றும் பண்பாட்டு மோதல்கள் என்பன தவிர்க்கமுடியாதவையாகிவிட்டன.

## 7. ஆக்கபூர்வமான மோதுகை முகாமைக்கான சர்வதேச பண்பாட்டு நடைமுறையொன்றினை கட்டியெழுப்புதல்

உள்ளக சமாதானத்தின் வலுவற்ற ஸ்திரநிலை என்பது தனிச்சமூகங்களுக்குள்ளேகூட கடினமான பணியாக உள்ளதுடன், மிகச்சிறந்த சூழலில்கூட நிலைபேறுகுறித்த எதுவித உத்தரவாதமுமற்ற, வலுவற்ற ஒரு சாதனையாகவே கருதப்படக்கூடியது ஆகும். அது சர்வதேச மட்டத்திலும் மிகக் கடினமான ஒரு பணியாகவே உள்ளது. அதுதான் சர்வதேச சகவாழ்வை அடைவதும், அதைப்பாதுகாத்துக் கொள்வதுமாகும் (போக் 1995 பெரன்ஸ் 1994). சர்வதேச சட்டத்தின்கீழ் படையினரைப் பயன்படுத்தல்மீதான அடிப்படைத் தடையொன்று 1945 இலிருந்து ஐக்கியநாடுகள் (ஐ.நா) சாசனத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தும்கூட, அரசுகள் தம் ஆயுதங்களை இன்னும் களையவில்லை. ஐக்கிய நாடுகள் கூட்டுப்பாதுகாப்பு முறைமையை அடிப்படையாகக் கொண்ட “படையின் தனிஏகபோக உரிமையை” அது பிரச்சினைக்குரியதுதான் என்று கருதப்பட வேண்டுமாயினும், ஐ.நா. பாதுகாப்புப் சபை கொண்டிருக்கிறது. “சர்வதேச மட்டத்திலான சட்டத்தினாட்சியினூடான கட்டுப்பாடு” என்பதனால் கருதப்படுவது என்ன என்ற விடயமானது சமீபத்திய வருடங்களிலேயே ஆராயப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளது (பவ்வர் 1996, காடிங் 1996, லைலக் 1998). உதாரணமாக இதை நாம் பார்போம். ஐ.நா.சாசனத்தின் கீழ் இந்த அரைகுறை தனி ஏகபோகம் சார் உரிமையைக் கொண்டிருக்கும் பாதுகாப்புப் சபை மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்க உண்மையில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவர் யார்? பாதுகாப்புப் சபையின் தீர்மானங்கள் சர்வதேசச் சட்டத்தை மீறுவதாகப் பாதிக்கப்பட்டவர்களால் அத்தகைய தீர்மானங்களுக்கெதிராகச் செய்யப்படும் புகார்களைக் கையாள்வதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரசபை எங்கேயுள்ளது? (Bedjaoui 1995, Falk 1993, Hoffe 1999, Martenczuk 1996, Zurn and Zangl 1999).

மேலும், சர்வதேசமயப்படுத்தல் மற்றும் தேசங்களைப் பொது ஆட்சிக்குட்படுத்தல் - அல்லது தற்காலப்பாணிக்கேற்றவாறு கூறுவதானால்-உலகமயமாக்கல் என்பவற்றின் கருத்தைக் கவரும் செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்பது உண்மைதான் (பீஸம் மற்றும் ஏனையோர் 1999) .ஆயினும், பாவனைக் கட்டுப்பாட்டின்மீது மிகக்குறைந்த எண்ணிக்கையிலான முறைமைசார் (உலகளாவியரீதியில் பயனுறுதியுள்ள) மட்டுப்பாடுகளையே உண்டுபண்ணுகின்ற, இன்றும்கூட ஆழமாய்பிளவுண்டிருக்கின்ற உலகிலேயே இச் செயன்முறைகள் இடம்பெறுகின்றன (செங்காஸ் 1994). சர்வதேச வான்போக்குவரத்துபோன்ற தொழினுட்ப கருமப்பாட்டு விடயங்களில்மட்டுமே உலகம்பூராவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் உள்ளன. பங்குச்சந்தையின் உளவியலைச் சுதேசமயப்படுத்துவதைத் தன் செயற்பாடாகக் கொண்ட, சர்வதேசநிதியைத் தொழில் நடைமுறைப்படுத்துவதற்கான இதற்கொப்பான விதிமுறைகள் இருந்தால் எப்படியிருக்கும் எனக் கற்பனைபண்ணிப்பாருங்கள்! உலகளாவிய மட்டத்தில் ஜனநாயகப் பங்கேற்பு என்பதன் கருத்து என்னவாக இருக்கக்கூடும்? ஏலவே இதைச் செய்துகொண்டிருக்கும் அரசுகளைவிட வேறுயார் சர்வதேசமட்டத்தில் ஒழுங்குபடுத்திக்கொண்டு முன்வரப்போகிறார்கள்? ஜனநாயகக் கோரிக்கையைத் திருப்திப் படுத்துவதற்கும், வன்முறை மோதலைத் தவிர்ப்பதற்குமாக, எவ்வாறு அதைச் செயற்படுத்தவுள்ளார்கள்? தொழில் வழங்குநர்களினதும், தொழில் பெறுநர்களினதும் சங்கங்கள்

போன்ற ஆர்வக்குழுவினர் அரசாங்கங்களோடு பக்கத்திற்குப் பக்கமாகப் பிரதிநிதித்துவம் செய்யப்படுவார்களா? சர்வதேச தொழில் அமைப்பு (ILO) தொழில்சார் சங்கங்கள், ஒவ்வொரு வகையிலும், அளவிலுமான பண்பாடு மற்றும் மத சமூகங்கள் மற்றும் பல்தேசிய கம்பனிகள் போன்ற நலன் குழுக்கள் அரசாங்கத்தோடு பிரதிநிதித்துவம் பெறுவார்களா? அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் "சிவில் சமூகம் "-பசுமைச் சமாதானம்" ˙சர்வதேச மன்னிப்புச் சபை" போன்ற அரசசார்பற்ற (NGO) அமைப்புக்களின் நிலை யாது? ஆனால் அவர்களது மக்களாணைக்கான அடிப்படை என்ன? உண்மையில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய ஜனநாயக அரசியல் அமைப்பொன்று சர்வதேசமட்டத்தில் என்ன வடிவத்தை எடுக்கப்போகின்றது? இச்சூழலமைவில் பிரஜைகளின் பங்கேற்பு என்பது என்ன அர்த்தத்தைக் கொடுக்கும் (Archibngi and Held 1995, Hofe 1999)? கேள்விமேல் கேள்விகள் எழுகின்றன. படிப்படியாகத் தோற்றம்பெற்றுவருகிற "Postnaional Constellatio" எனப்படும் "தேசீயத்துக்குப் பின்னரான சிறப்புடையோர் கூட்டத்தின்" பார்வையில், இருபத்தியோராம் நூற்றாண்டின் இக்கேள்விகளுக்கெல்லாம் விடைகாணப்பட்டேயாகவேண்டும் (Habermas 1998, Zuru 1998).

வேறுவகையில், சர்வதேசமட்டத்திலுங்கூட, சமத்துவமின்மைகளை அகற்றுவதற்கும், அத்துடன் குறைந்தபட்சம் நியாயபூர்வமான விநியோகத்தைநோக்கிப் பணிபுரிவதற்குமாவது முயற்சிகள் எடுக்கப்படாவிடில், மோதுகையை நாகரீகமயப்படுத்துவதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவாகவே இருக்குமெனக் கருதமுடியும். செயல்முனைப்புடைய, செயல்நோக்குடைய முயற்சிகள் எடுக்கப்பட்டால்மட்டுமே, சிறப்புரிமை மற்றும் பாரபட்சம் என்பவற்றின் இயக்கவியலால் உருவாக்கப்படுவதும், இறுதியில் கட்டுப்படுத்தமுடியாமற் போகக்கூடியதும் திடீர் எழுச்சிகொள்ளக்கூடியதுமான அரசியல் சக்தியின் உருவாக்கத்தைத் தடுப்பது சாத்தியமாகும் (பிரிஸ்கோர்ன் 1997) அப்போதுதான், பொருண்மை வழிவகைகளில் வலுவூட்டப்பட்ட நிலையில், ஆக்கபூர்வமான மோதுகை முகாமைத்துவத்தின் பண்பாட்டுக்கு சர்வதேச மட்டத்தில் ஒரு சந்தர்ப்பம் இருக்கும் (பொப்யோ 1998).



## 8. சமாதானக் கொள்நெறி

உள்ளக சமாதானத்துடனான அனுபவத்தையும், சர்வதேச சமாதானத்திற்கும் மற்றும் பொருத்தமான ஒரு ஒழுங்கிற்குமான தேவைப்பாடுகளையும் நாம் பரிசீலனைசெய்து பார்த்தால் மோதுகையின் நீடித்ததும், நிலைபேறானதுமான நாகரீகமயப்படுத்தலே சமாதானம் என்று வரைவிலக்கணங் கூறப்பட்டநிலையில், சமாதானமானது படைவலிமையின் பயன்பாட்டைத் தடுப்பதற்கென முடுக்கிவிடப்பட்ட, வன்முறையற்றதோர் அரசியற் செயன்முறையென்றே நோக்கப்படவேண்டும். இந்தச் செயல்முறைமீது நம்பகத்தகுந்ததும், நாகரீக மயப்படுத்தப்பட்டதுமான மோதுகை முகாமைத்துவம் அல்லது நீடித்த சமாதானம் என்பது தொடர்பாகக் கூறப்படக்கூடியது C செங்காஸ் D மற்றும் செங்காஸ் E 1996) இச் செயன்முறை வழியாக, உடன்பாடுகளும் சமரசங்களும், சமூகக்குழுக்களிடையே அல்லது அரசுகளுக்கும் நாடுகளுக்குமிடையே ஏற்படுத்தப்படவுள்ள அமைதிவழி உறவுநிலைகளை இயலுமானதாக்கும் என்பதாகும் நிலைமைகளை உருவாக்கப் பயன்படுத்தப்படவேண்டும் அவர்கள் வாழ்வை இடருக்குட்படுத்தாமல், சமாதானவழியிலான அனைத்துத்தீர்வுகளுக்கும் ஆற்றல் இழந்த பின்னர், வன்முறையை நாடுவதே தேவையானது என்றநிலைக்கு அவர்கள் வருமளவுக்கு நீதி அல்லது நலன்கள்பற்றிய தனிநபர்களினதும், குழுக்களினதும் புலனுணர்வு தீவிரமாக மீறப்படாமலும் இந்நிலைமைகள் உருவாக்கப்படவேண்டும். இந்தவகையில் வடிவங்கொடுக்கப்பட்டதும் சமாதானக் கொள்கையானது, நவீன உலகில், அடிப்படை அரசியல் மயப்படுத்தலிலிருந்து விளைகின்ற அரசியல் நச்சுப்பகைமையின் இன்றியமையாததும், தொடர்ச்சியானதும் மற்றும் ஆக்கபூர்வமானதுமான கையாளுகையே எனப் புரிந்துணரப்பட முடியும்.

# 9. சமாதானத்திற்கான பூகோளநிலைப்பட்ட ஒரு முறைமை

சமாதானக் கொள்கையானது, சிறியதோர் அரங்கிலாவது - அதாவது சமூகங்களுக்குள் மற்றும் அரசுகளுக்குள் வெற்றிபெறவேண்டுமாயின்-அதற்கான நிலைமைகள் சாதகமாயிருத்தல் வேண்டும், உண்மையில் பாதகமான நிலைமைகள், வன்முறை தலைதூக்குவதற்கு வன்முறையற்ற மோதுகைத் தீர்வுகள் விட்டுக் கொடுக்கும் சூழ்நிலைகளுக்கே பெரிதும் இட்டுச்செல்கின்றன. இருந்தபோதிலும், முன்னைய கேள்விகள் உட்கிடையாகத் தெரிவிப்பது போல் புதியதொரு உலக ஒழுங்கை உலகமட்டத்தில் உருவாக்குதல் தொடர்பாக அவசியமான முன்தேவைகள், நோக்கெல்லையில் இதைவிடப் பரந்தவையாகும். இங்குள்ள நிலைமைகள் சாதகத்தன்மையிலிருந்து வெகுதூரத்தில் இருப்பதே இதற்கான காரணமாகும். (ரிட்பேர்ஜர் 1994).

சமாதானத்தின் ஆக்கபூர்வமான எண்ணக்கருக்களை வடிவமைக்க முயற்சித்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் போரொழிப்புவாதிகள் சர்வதேச நிபந்தனைகளின்படி சிந்தித்தார்கள். ஓர் உலக சமாதான ஒழுங்கினை அடைவதற்காக அவர்கள் நேர்மையான இலக்குடன் செயற்பட்டார்கள். பழையதும், உண்மையில் மிகப்புதியதுமான பல உலகளாவிய கூட்டுச்சார்புகள்மீது எமது நினைவுகளை மீட்டிப்பார்க்கும் நாம் இந்நாட்களில் இதனை உலகளாவிய ஆட்சிமுறை என அழைப்போம். இருந்த போதிலும், இத்தகைய ஓர் ஒழுங்கு உண்மையில் கருமப்பட வேண்டுமெனில், அவற்றுக்கு பிராந்திய அல்லது நிர்மாண அம்சங்கள் தேவைப்படும் என்பதை, பிராந்திய மட்டத்திலும் கூட அவர்கள் யதார்த்த பூர்வமாக அறிந்திருந்தனர். அரசியல் சமூகத்தைக்கட்டியெழுப்புதல் என்பது கடினமானதொரு கூட்டுக்கற்கைச் செயன்முறையாகும். ஐரோப்பிய ஒருங்கிணைப்புடனான அனுபவத்தினால், இது குறிப்பாக எண்பிக்கப்படுகின்றது. இவ்வொருங்கிணைப்புச் செயன்முறையானது, குறிப்பிட்ட பகிரப்பட்ட அடிப்படைப் பெறுமானங்கள், மேம்பாடுற்ற தொடர்பாடல்கள், எல்லாத்தரப்பினர்க்குமான நீதியான பரிமாற்றங்கள் மற்றும் அனைத்திற்கும்மேலாக, இவ்வொருங்கிணைப்புச் செயன்முறையின் பலவீனமான பங்கேற்பாளர்களின் தேவைகள் மற்றும் கவலைகள் என்பவற்றின் மட்டிலான பதிற்குறி புரியும் கடப்பாடு என்பவற்றைத் தேவைப்படுத்துகின்றது. எவ்வாறாயினும் முதலில் ஐரோப்பிய சூழமைவில் மட்டும் இது எடுக்கப்பட்டாலுங்கூட, பிராந்திய மட்டத்தில் இவ்வொருங்கிணைப்புச் செயன்முறை வெற்றியடையவே வேண்டும், ஏனெனில், தேசிய அரசு என்பதற்கு அப்பால் உள்ளதான நிரந்தர சமாதான ஒழுங்கு என்பது ஒரு மாயை அல்ல. ஆனால் அரசியலமைப்புரீதியான, நிறுவனரீதியான, பொருண்மைசார்ந்த மற்றும் உணர்வுபூர்வமான முயற்சிகளின் வழியாக நிரந்தர நிலையையடையும் வாய்ப்புடனான நம்பத்தகுந்த அடித்தளத்தின் மீது, "கான்ற்" இன் வார்த்தையில் கூறுவதானால் (ஜெஸ்ரிவ்ரெற்) "நிறுவப்பட முடியும்" (டொயிஷ் மற்றும் ஏனையோர் 1987, ஸீலின்ஸ்கி 1995, செங்காஸ் 1992).

உலகளாவிய ஆட்சியை நிறுவுவதற்கான முயற்சிகளில், காரண நிலப்பட்ட் போரொழிப்புவாத சார்பாளர்களால் தெளிவாக அடையாளங்காணப்பட்டவாறான இதன் குறிக்கோள் யாதெனில், ஓர் உலக சமாதான ஒழுங்கிற்காக ஒரு கட்டுக்கோப்பையும் உள்ளக வாழ்வையும் உருவாக்குவதாகும். அதாவது, சமாதானமாக விளங்கும் அரசொன்றின் கீழ்மட்டத்திலிருந்து (ஆ என்னே ஒரு முன்நிபந்தனை!) கட்டிறுக்கமற்ற அல்லது பரவலானவகையில் ஒன்றுசேர்ந்த பிரதேச அமைப்புக்களுடனான அதன்சேர்க்கைவழியாக, எந்த அதியுயர்மட்டத்தில், தவிர்க்கமுடியாத மேதுகைகளின் நாகரீகமயப்படுத்தப்பட்ட தீர்வுக்காக, நிலைபேறானதும், நிறுவனமயமானதும் மற்றும் சட்டபூர்வமாக அமைக்கப்பட்டதுமான வரைச்சட்டக நிலைமைகளை சர்வதேச அமைப்புக்களும் சர்வதேச விதிமுறைகளும் (சர்வதேச ஆட்சி குழுக்கள்) உருவாக்குகின்றனவோ, அந்த மட்டத்திற்குச் செல்வதாகும். இங்குள்ள பணி யாதெனில், எல்லாமட்டங்களிலும் வன்முறை மோதலுக்கெதிராகச் செயலாற்றுவதும், மற்றும் உண்மையில் கோட்பாட்டின்படி அதை வெல்லுவதுமாகும். இது ஒரு காலத்தில் இலட்சியவாதிகளின் எண்ணமாக இருந்தது, இன்று அது ஒரு நடைமுறைப் பயன்சார், செல்கின்ற உண்மையான அரசியலின் (சநயடிழடவைமை) பிரதானமூலமாக விளங்கவேண்டும்.

# 10. பூகோளநிலைப்பட்ட சமாதான முறைமை ஒன்றினை ஊக்கிவளர்ப்பதற்கான செயற்பாடுகள்

உலகளாவிய ஆட்சிமுறையை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்ட இந்த உண்மை அரசியலை அடியெடுத்துக்கொடுத்து ஆரம்பித்துவைப்பது யார்? முன்னிலை வகிக்கும் அரசியல் மேதைகளின் விவேகமான நடத்தையிலிருந்து ஒரு புதிய உலக ஒழுங்கு விளையுமென ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டிருந்த போரொழிப்புவாதிகள் ஒரு காலத்தில் நம்பியிருந்தார்கள். வேறுவார்த்தைகளில் கூறுவதானால், சர்வதேசரீதியிலான, உலகின் எல்லாப்பகுதிகளுடனும் தொடர்புடைய நியமங்களை அடிப்படையாகக்கொண்ட சாதுரியமான இரஜதந்திர செயற்பாடுகளிலிருந்து, சர்வதேச அமைப்புக்களின் ஆதரவுடன் இது நிகழுமென்று நம்பியிருந்தார்கள். அரசுகளுக்கிடையிலான பண்புகளின் அடிப்படையிலான வேறுபாட்டை அவர்கள் உணர்ந்திருந்தமையால், அரசுடன் அவர்களுக்குப் பிரச்சினைகள் ஏதும் இருக்கவில்லை. அனைத்திற்கும்மேலாக "போக்கிரித்தனமான அரசு, என்பதன் பொருளை அவர்கள் ஏலவே புரிந்திருந்தார்கள் (பென்ஸ்-பிறைட் 1998,73). சர்வதேச சமூகத்தின் செயற்பாட்டாளர்களுள் சர்வதேச ஒழுங்கினை ஏற்றுக்கொள்ள உறுதியாய் மறுத்தவர்களை இது குறிக்கின்றது.

இவ்வாறு அரசுகளின் சமூகமும், குடியுரிமை சார்ந்த பெண்களுடையதான அல்லது சோஷலிச போரொழிப்புவாத இயக்கங்களும், அவற்றின் சர்வதேச வலைப்பின்னல்களும் பயனுள்ளவையெனக் கருதப்பட்டிருந்த போதிலும், தற்போதுள்ள உளப்பாங்குகளையும், மற்றும் நிலைமைகளையும் பிரதிபலிக்கின்ற இப்போரொழிப்புவாதத் தத்துவமானது அரசின்மீதும் அரச செயற்பாட்டாளர்கள்மீதும் பெரிதும் தங்கியிருந்தது. அராஜகச் சிந்தினையானது இவ்வகையான போரொழிப்புவாதத்திற்கு முற்றிலுமாக அந்நியப்பட்டிருந்தது.



வெவ்வேறு பண்புகளுடனான அரசுகள் இன்னும் இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மொதுகையை நாகரீகமயப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை இது திறந்துவிடுவதால், இவ்வுண்மையைக் குறைத்துமதிப்பிடுவது புத்திசாலித்தனமன்று. ஆயினும், நவீன உலகின் மேலும் ஆழமானதும் மற்றும் மேலும் அகல்விரிவானதுமான கூட்டுச்சார்புகள் கருதுவது யாதெனில் குறைந்தபட்சம் பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பிலாவது (OECD) அரசு மற்றும் அரசுநிலை என்பதன் முக்கியத்துவம் குறைந்து வருகிறது என்பதாகும். அத்தகைய கூட்டுச்சார்புகள் பொருளாதார மற்றும் பண்பாட்டு செயற்பாட்டாளர்களை மட்டுமல்ல, குறிப்பாக சர்வதேச அரசியலில் பாத்திரமொன்றை ஏற்பதற்கென, சமூக செயற்பாட்டாளர்களையும் அனுமதிக்கின்றன (செம்பியல் 1993).

சிறிது காலமாக அவதானிக்கப்பட்டுவந்த வெளிநாட்டுக் கொள்கையின் அதிகரித்த அளவிலான பொருளாதாரப் பண்பிற்கு அருகருகே இன்று சர்வதேச உறவுகளும் "சமூகமயப்படுத்தப்பட்டவையாக" மாறிவருகின்றன. வெளிநாட்டுக்கொள்கைமீது இது தன்னளவில் ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ளது. ஊடகங்கள், ஆர்வக்குழுக்கள் கட்சிகள் அரசியல் மன்றங்கள், தொழில்சார் சங்கங்கள், அ.ச.நிறுவனங்கள் மற்றும் ஏனைய சமூகக் குழுக்கள் என்பன தேசிய எல்லைகளைக் கடந்தநிலையில் மேலும் மேலும் அதிகரித்தவாறு வலைப்பின்னல் மயப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுட்சில குறிப்பிடத்தக்க அதிகாரங்களையும் ஏலவேபெற்றுள்ளன (கல்லீ B 1998).

மேலும், இன்றைய உலகில் அனர்த்தங்கள், மற்றும் அவசரநிலைகள் என்பவற்றின் முகாமைத்துவத்தில், ஆனால், குறிப்பாக, இனக்குழும அரசியல் மோதுகைளுக்கான பதிற்குறிகளில், அ.சா.நிறுவனங்கள் இன்றியமையாதவையாக இருக்கின்றன. சமூகத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் பிரசைகளுக்காக சமாதானக்கொள்கை நடவடிக்கையின், புதியதும் பல்லினப்பாங்கு கொண்டதுமான களமொன்று உருவாகிவருகின்றது. அது பதவியினரின் பிரசன்னம் மற்றும் திறன்கள்தொடர்பில் பல்வேறுவகையான கோரிக்கைகளை எழுப்புகின்றது. அதன் செயற்பாடுகள் பின்வருவனவற்றை

உள்ளடக்குகின்றன. அரசியல் ரீதியாகவும், சமூகரீதியாகவும் சலுகையற்ற குழுவினருக்கு உதவுதல் ("வலுவளித்தல்") ஆபத்திலிருப்போர்க்கு வழித்துணையாகச் செல்லல், அகதிகளுக்கு ஆதரவளித்தல், மோதுகையின் பின்னரான சமாதான உருவாக்கம், ஆரம்பிக்கும் நிலையிலுள்ள மோதுகைகள் பற்றியும் அவை அதிகரிப்பதற்கான அறிகுறிகள் பற்றியும் அறிக்கைசெய்தல் (நேர கால எச்சரிக்கை) ஆர்ப்பாட்டங்களை அவதானித்தல், பகைமைக்குழுக்களிடையே சொல்லாடலை ஒழுங்குசெய்தல், இணக்கப்பாட்டில் செயன்முறையிலும் உதவியளித்தல், நீதித்துறைசார் அவதானிப்பாளர்களை வழங்குதல், பதற்றம் உருவாகக்கூடிய பிரதேசங்களிலும், பதற்றம் உண்மையாக நிலவும் இடங்களிலும் தாமே பிரசன்சமாயிருத்தல், தேர்தல் அவதானிப்பாளர்களை வழங்குதல் மற்றும் ஐ.நா (யு.என்) ஐரோப்பாவில் பாதுகாப்பிற்கும், ஒத்துழைப்புக்குமான அமைப்பு (OSCE) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) போன்ற அதிகாரபூர்வ பணிக்குழுக்களுக்கு மதியுரை வழங்கல் (மேர்க்கல் 1998).

நீண்டகாலத்தவணையில் இச்செயற்பாடுகள் தருணத்திற்கேற்ற அடிப்படையில் ஏற்படுத்தப்பட முடியாதவை. தேவையான உறுதிப்பாட்டுடன் பொருத்தமான பயிற்சியும் அவற்றிற்குத் தேவை. இன்னொருவகையாகக் கூறுவதானால், குறித்த பிரச்சினை, அதன் சூழ்நிலை என்பவற்றுடன் தொடர்புடைய "சிவில் சமாதான சேவை" அல்லது உண்மையில் கூறப்போனால் எங்கு பொருத்தமான திறன்கள் சிவில் அர்ப்பணிப்புக்கு நிகராயிருக்கின்றனவோ அந்த நிலையில் உள்ள விசேடத்துவமான சமாதான சேவையே தேவை. இது ஆக்கபூர்வமான போரொழிப்பு வாதத்திற்கான புதிய மற்றுமொரு செயற்பாட்டுப்பிரதேசத்திற்கான வழியைத்திறந்து விடுகிறது. இதற்குத் தொடக்கநிலை மற்றும் தொடர்நிலையிலான ஆராய்ச்சிகளும், மதிப்பீடுகளும் தேவைப்படுகின்றன. ஆயினும் இது 1990களிலிருந்து மட்டுமே விருத்தியடையத்தொடங்கியது.

இச்சமாதானச் செயற்பாடுகளுக்கான எண்ணக்கருக்களை விருத்திசெய்வதற்கான தேவையானது அவற்றின் சேவைகளுக்கான கோரிக்கையுடன் சேர்ந்து அதிகரிக்கின்றது. உண்மையான தேவைகளை, குறிப்பாக ஆரம்ப அனுபவங்களுடனான தேவைகளை இது பிரதிபலிக்கின்றது. இவ்வனுபவங்கள், குறிப்பாக, நெருக்கடிகளிலும், மோதுகைச் சூழ்நிலைகளிலும் பெறப்பட்ட அனுபவங்கள், வெவ்வேறு மட்டங்களில் செயற்பட்டு, வெவ்வேறு இலக்குக்குழுக்களைக் கொண்டிருந்தாலும், பல சந்தர்ப்பங்களில், எந்த அளவுக்கு அரசும் சிவில் சமுதாயச் செயற்பாட்டாளர்களும் ஒருவரில் ஒருவர் தங்கியுள்ளனர் என்பதைக் காண்பிக்கின்றன (லெடராச் 1994). ஆயுதப்போராட்டங்களில், உதாரணமாக, சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் வகிபாகமொன்றை ஏற்க இயலுமானவர்களாய் இருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்குச் சிலசமயங்களில் இராணுவப்பாதுகாப்பு ஏற்பாடுகளுங்கூட இன்றியமையாதவையாய் இருக்கமுடியும். முகவர் நிலையங்களுக்கிடையேயான தொடர்பில் காணப்படும் கொள்கைப் பிடிவாதமான அச்சங்கள் இச்சூழமைவில் எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதாக நிரூபணமாகியுள்ளன. ஆனால் பகிரப்பட்ட கற்கைச்செயன்முறைகள், அதாவது "பல்-தட நடவடிக்கைகள், முன்செல்வதற்கான வழியாக இருப்பதாகத் தம்மைத் தாமே காண்பித்துள்ளன. (ரோப்பர்ஸ் 1997).

## 11. உசாத்துணை நூல்களும் மேலதிக வாசிப்பும்

Archibugi, Daniele, and David Held (eds.) 1995. *Cosmopolitan Democracy: An Agenda for a New World Order,* Cambridge: Polity Press.

Bauer, Andreas F. 1996. *Effektivität und Legitimität. Die Entwicklung der Friedenssicherung durch Zwang nach Kapitel VII der Charta der Vereinten Nationen unter besonderer Berücksichtigung der neueren Praxis des Sicherheitsrates,* Berlin: Duncker and Humblot.

Bedjaoui, Mohammed 1995. *The New World Order and the Security Council: Testing the Legality of its Acts* Dodrecht: Nijhoff.

Beisheim Marianne et al. 1999. *Im Zeitalter der Globalisierung? Thesen und Daten zur gesellschaftlichen und politischen Denationalisierung,* Baden-Baden: Nomos.

Benz, Wolfgang (ed.) 1988. *Pazifismus in Deutschland,* Frankfurt am Main: Fischer.

Bobbio, Norberto 1998. *Das Zeitalter der Menschenrechte. 1st Toleranz durchsetzbar?,* Berlin: Wagenbach.

Boulding, Kenneth 1978. *Stable Peace,* Austin: University of Texas Press.

Brieskorn, Norbert (ed.) 1997. *Globale Solidarität,* Stuttgart: Kohlhammer.

Calließ, Jörg (ed.) 1997. *Wodurch und wie konstituiert sich Frieden? Das zivilisatorische Hexagon auf dem Prüfstand,* Loccum: Ev. Akademie.

Calließ, Jörg (ed.) 1998. *Barfuß auf diplomatischem Parkett. Die Nichtregierungsorganisationen in der Weltpolitik,* Loccum: Ev. Akademie.

Czempiel, Ernst-Otto 1993. *Weltpolitik im Umbruch,* München: Beck.

Czempiel, Ernst-Otto 1998. *Friedensstrategien,* Opladen: Westdeutscher Verlag.

Dabag, Mihran and Kristin Platt (eds.) 1998. *Genozid und Moderne,* Bd. 1., Opladen: Leske & Budrich.

Deutsch, Karl W. et al. 1957. *Political Community and the North Atlantic Area: International Organization in the Light of Historical Experience,* Princeton: Princeton University Press.

Falk, Richard et al. (eds.) 1993. *The Constitutional Foundations of World Peace,* New York: State University of New York Press.

Falk, Richard 1995. *On Humane Governance: Toward a New Global Politics,* Oxford: Polity Press.

Ferencz, Benjamin B. 1994. N*ew Legal Foundations for Global Survival: Security Through the Security Council,* New York: Oceana.

Fried, Alfred H. 1918. *Problem der Friedenstechnik,* Leipzig: Verlag Naturwissenschaften.



Fukuyama, Francis 1992. *The End of History and the Last Man,* New York: The Free Press.

Gading, Heike 1996. *Der Schutz grundlegender Menschenrechte durch militärische Maßnahmen des Sicherheitsrates – das Ende staatlicher Souveränität?,* Berlin: Duncker & Humblot.

Gantzel, Klaus-Jürgen and Torsten Schwinghammer 1995. *Die Kriege nach dem Zweiten Weltkrieg 1945 bis 1992. Daten und Tendenzen,* Münster/Hamburg: Lit.

Habermas, Jürgen 1998. *Die postnationale Konstellation,* Frankfurt am Main: Suhrkamp.

Heinsohn, Gunnar 1998. *Lexikon der Völkermorde,* Reinbek bei Hamburg: Rowohlt.

Held, David 1995. *Democracy and the Global Order: From the Modern State to Cosmopolitan Governance,* Cambridge: Polity Press.

Höffe, Otfried 1999. *Demokratie im Zeitalter der Globalisierung,* München: Beck.

Krell, Gret and Harald Müller (eds.) 1994. *Frieden und Konflikt in den internationalen Beziehungen,* Frankfurt am Main: Campus.

Lailach, Martin 1998. *Die Wahrung des Weltfriedens und der internationalen Sicherheit als Aufgabe des Sicherheitsrates der Vereinten Nationen,* Berlin: Duncker & Humblot.

Lederach, John Paul 1994. *Building Peace: Sustainable Reconciliation in Divided Societies,* Washington: US Institute of Peace Press.

Martenczuk, Bernd 1996. *Rechtsbindung und Rechtskontrolle des Weltsicherheitsrates,* Berlin Duncke Humblot.

Merkel, Christine (ed.) 1998 *Friedenspolitik der Zivilgesellschaft,* Münster: Agenda.

Meyer, Berthol (ed.) 1996. *Eine Welt oder Chaos?,* Frankfurt am Main: Suhrkamp.

Rittberger, Volker 1994. *Internationale Organisationen. Politik und Geschichte,* Opladen: Leske & Budrich.

Ropers, Norbert 1997. *"Prävention und Friedenskonsolidierung als Aufgabe für gesellschaftlice Akteure"*, in Senghaas, op. cit., 219-242.

Senghaas, Dieter 1992. *Friedensprojekt Europa*, Frankfurt am Main: Suhrkamp.

Senghaas, Dieter 1994a. *"Interdependenzen im internationalen System"*, in Krell and Müller (eds.), op. cit., 190-222.

Senghaas, Dieter 1994b. *Wohin driftet die Welt? Über die Zukunft friedlicher Koexistenz*, Frankfurt am Main: Suhrkamp.

Senghaas, Dieter (ed.) 1995. *Den Frieden denken*, Frankfurt am Main: Suhrkamp.

Senghaas, Dieter (ed.) 1997. *Frieden machen*, Frankfurt am Main: Suhrkamp.

Senghaas, Dieter (ed.) 1998. *Zivilisierung wider Willen. Der Konflikt der Kulturen mit sich selbs*, Frankfurt am Main: Suhrkamp.

Senghaas, Dieter 2001. *The Clash Within Civilizations: Coming to Terms with Cultural Conflicts*, London/New York: Routledge.

Senghaas, Dieter and Eva Senghaas 1996. "Si vis pacem, para pacem – Überlegungen zu einem zeitgemäßen Friedenskonzept", in Berthold Meyer, op. cit. 245–275.

Vogt, Wolfgang R. (ed.) 1996. *Frieden durch Zivilisierung? Probleme – Ansätze – Perspektiven*, Münster: Agenda.

Zielinski, Michael 1995. *Friedensursachen. Genese und konstituierende Bedingungen von Friedensgemeinschaften am Beispiel der Bundesrepublik Deutschland und der Entwicklungihrer Beziehungen zu den USA, Frankreich und den Niederlanden*, Baden-Baden: Nomos.

Zürn, Michael 1998. *Regieren jenseits des Nationalstaate*, Frankfurt am Main: Suhrkamp.

Zürn, Michael and Bernhard Zangl 1999. *"Weltpolizei oder Weltinterventionsgericht? Zur Zivilisierung der Konfliktbearbeitung"*, Internationale Politik, 54:8, 17–2